
இயல் ஏழு

நாகரிகம்,
நாடு, சமூகம்

# வாழிய நிலனே



## கற்றல் நோக்கங்கள்

- விடுதலைப் போரில் தமிழர்கள் ஆற்றிய தொண்டினை உணர்ந்து நாட்டுணர்வு பெறுதல்
- இலக்கியங்கள் காட்டும் நாட்டு வளம் குறித்த செய்திகளை அறிந்து நாட்டை வளப்படுத்தும் ஊக்கத்தைப் பெறுதல்
- சங்ககால மதுரைநகரக் காட்சிகளை இலக்கியங்கள்வழி அறிதல்
- பல்வேறு நூல்களைப் படித்து, ஒரு தலைப்பையொட்டிக் கருத்துகளை ஒருங்கிணைத்துக் கூறும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்
- மொழிப் பயன்பாட்டில் ஆகுபெயர் எவ்விதம் வெளிப்படுத்தப்படுகிறது என்பதைக் கண்டறிதல்



9th_Tamil_Pages 122-264.indd 181 23-01-2020 20:21:11

உரைநடை உலகம்

நாடு

ஏ


# இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு

– மா.சு. அண்ணாமலை

**நுழையும்முன்**

இந்திய தேசிய இராணுவம் இந்திய விடுதலைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு. இந்த அமைப்பின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் நம் தமிழர்கள். விடுதலைப் போராட்டத்தை ஒளி மங்காமல் பாதுகாத்தவர்களுள் ஒருவரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடன் இணைந்து இந்திய தேசிய இராணுவப் படையில் போராடிய தமிழர்களின் பங்கு வியந்து போற்றத்தக்கது.

LJZZSI



இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள், ஆங்கிலேயப் படைகள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தன. இப்படையில் இந்திய வீரர்களும் இருந்தனர். சரணடைந்த அவ்வீரர்களைக் கொண்டு ஜப்பானியர்கள், மோகன்சிங் என்பவரின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் (ஐ.என்.ஏ.) என்ற படையை உருவாக்கினர்.

இந்திய தேசிய இராணுவத்திற்கு மக்கள் ஆதரவு பெருகியது. அக்காலகட்டத்தில் தமிழகத்தில் இருந்து மலேயா, பர்மா போன்ற நாடுகளுக்குப் பிழைப்பிற்காகச் சென்ற தமிழர் பலர் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தனர். இந்திய தேசிய இராணுவத்தில் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. அதில் ஒன்றுதான் ஒற்றர்படை. ஜப்பானியர்கள் ஒற்றர்படையில்

இருந்த வீரர்களை, இந்தியாவில் உள்ள ஆங்கிலேய இராணுவத்தைப் பற்றி ஒற்றறிய நீர்மூழ்கிக்கப்பல் மூலம் கேரளாவிற்கும் குஜராத்திற்கும் அனுப்பினர். சிலரைத் தரைவழியில், பர்மாக் காடுகள் வழியாக இந்தியாவிற்கு அனுப்பினர். இந்திய இராணுவம் அவர்களைக் கைது செய்து சென்னைச் சிறைக்கு அனுப்பியது; பலருக்கு மரண தண்டனை அளித்தது.

### தூண்களாகத் திகழ்ந்தவர்கள்

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க, 91நாள்கள் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தார். 1943ஆம் ஆண்டு சூலை மாதம் 9ஆம் நாள் பதவியேற்றார். அவர் உரையாற்றிய மாபெரும் கூட்டத்தில் "டெல்லி நோக்கிச் செல்லுங்கள்"(டெல்லி சலோ) எனப் போர்முழக்கம் செய்தார். இவரின் வேண்டுகோள் அனைவரது மனத்திலும் பசுமரத்தாணிபோல் பதிந்தது.

நேதாஜி தலைமையில் இருந்த இந்திய தேசிய இராணுவப்படை பிரித்தானிய அரசை எதிர்த்தது. அப்போது தமிழகத்திலிருந்து பெரும்படையைத் திரட்டி இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர் பசும்பொன் முத்துராமலிங்கனார்.



நேதாஜி தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

– பசும்பொன் முத்துராமலிங்கனார்

இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.



**தெரியுமா?**


### வான்படைப் பிரிவு

இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் டோக்கியோ கேடட்ஸ்.

போர்ச் சூழலுக்கு நடுவில் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் டோக்கியோ செல்வது ஒரு சவாலாக இருந்தது. பர்மாவில் இருந்து காட்டுவழியாகப் பயணம் செய்து, சயாம் மரண ரயில் பாதையைக் கடந்து, அங்கிருந்து படகு வழியாகத் தப்பிச் சென்று, பழைய கப்பல் ஒன்றில் ஏறி, சீறும் அலைகளில் சிக்கித் தவித்து முடிவில் ஜப்பானின் "கியூசு" தீவை அடைந்தனர். அந்தத் தீவு, கடற்படையின் வசம் இருந்தது.

காலை 5 மணிக்கு எழுந்து மூன்று கல் தூரம் ஓடவேண்டும். அப்போது குளிர், சுழியத்திற்குக் கீழ் இருக்கும். உதடுகள் வெடித்து வலி தாங்க முடியாது. பனிப்புகை படர்ந்த மைதானத்தில் ஓடுவார்கள். மூன்று கல் தூரம் ஓடியதும் ஐந்து நிமிடங்கள் ஓய்வு, பிறகுதான் சிறப்புப் பயிற்சிகள். அதை முடித்துக்கொண்டு அவசரமாகக் குளித்துத் தயாராகி வர வேண்டும்.

– பசும்பொன் மடல், மடல் 32, இதழ் 8,சனவரி 2018, ப.14–16



## மகளிர் படை உருவாக்கம்

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி. இப்படையில் தமிழ்ப் பெண்கள் பெருமளவில் பங்கேற்றனர். இவர்களில் தலைசிறந்த தலைவர்களாக ஜானகி, இராஜாமணி முதலானோர் விளங்கினர்.

நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். சிறந்த வீரர்களை உருவாக்க நேதாஜி 45 இளைஞர்களை டோக்கியோ அனுப்பினார். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். அதில் பயிற்சி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கேப்டன் தாசன் ஆவார். அவர் பின்பு சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றினார்.

## இரண்டாம் உலகப்போர்க் காலம்

இந்திய தேசிய இராணுவம் ஜப்பானிய இராணுவத்தோடு சேர்ந்து, ஆங்கிலேயரோடு போரிடப் பர்மா வழியாக இந்தியா வரத் திட்டமிட்டது.

தமிழ் மக்கள் துணையுடன் போராடிய நேதாஜியைக் கண்டு ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் கொண்டார். 'மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என்று சர்ச்சில் கூறினார். அதற்கு நேதாஜி இந்தத் தமிழினம்தான் ஆங்கிலேயர்களை அழிக்கும் என்று பதில் கூறினார்.

### நேதாஜியின் பொன் மொழி

- அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மனம் ஒப்ப இடம் தருதல் மிகப் பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வைத் தந்தே ஆக வேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும். எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்குப் போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்.
- மனதை மலரவைக்கும் இளங்கதிரவனின் வைகறைப் பொழுது வேண்டுமா? அப்படியானால் இரவில் இருண்ட நேரங்களில் வாழக் கற்றுக்கொள்.



9th_Tamil_Pages 122-264.indd 184 23-01-2020 20:21:11

## தெரிந்து தெளிவோம்

**நேதாஜியின் பொன்மொழி**

விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும் சுதந்திரத்தினால் உண்டாகும் மனநிறைவும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலையுண்டு. அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும்தான்.

இரண்டாம் உலகப்போரில் பர்மாவில் நடந்த போர் "மிகவும் கொடூரமானதாகும்". இந்திய தேசிய இராணுவம் 1944ஆம் ஆண்டு மார்ச் 18அன்று ஆங்கிலேயரை வென்று இந்தியாவிற்குள் மணிப்பூர்ப் பகுதியில் 'மொய்ராங்' என்ற இடத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றியது. ஆனால், அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும் சேர்ந்து போரிட்டதால் இந்த வெற்றி நிலைபெற்று நீடிக்கவில்லை. இப்போரில் ஒரு இலட்சம் இந்தியரும் ஜப்பானியரும் வீரமரணம் எய்தினர்.

### மரணம் பெரிதன்று

இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த பதினெட்டு இளைஞர்கள், 1943-45ஆம் ஆண்டுகளில் சென்னைச் சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.

1944ஆம் ஆண்டு பதினெட்டே வயதான இராமு என்பவர் தூக்கிலிடப்பட்டார். அவர் தூக்கிலிடப்படுவதற்கு முதல்நாள் இரவு, "நான் என் உயிரைக் கொடுப்பதற்குக் கொஞ்சமும் கவலைப்படவில்லை; ஏனெனில் நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை" என்று கூறினார்.

மரணதண்டனை பெற்ற அப்துல்காதர் பின்வருமாறு கூறினார்.

"வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர்நீத்த முழுநிலவினைப் போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்".

இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்ததில் இந்திய தேசிய இராணுவத்தினரின் பங்கினை நாம் மறந்துவிட முடியாது. அவர்கள் தாயக நலனுக்காகத் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தனர். இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட தமிழர்கள் பலர் வீரமரணத்தைத் தழுவினர். அவர்களின் வீரம் போற்றுதலுக்குரியது. தங்கள் இன்னுயிர் இழந்த முகம் தெரியாத தமிழர்களின் அர்ப்பணிப்பு உணர்வையும் அஞ்சாத வீரத்தையும் நாட்டுப்பற்றையும் என்றும் போற்றுவது நம் கடமையாகும்.



**நூல் வெளி**

பேராசிரியர் மா.சு.அண்ணாமலை: "இந்திய தேசிய இராணுவம் – தமிழர் பங்கு" என்ற நூலுக்காகத் தமிழக அரசின் பரிசுபெற்றவர். இவர் தலைமையில் எடுக்கப்பட்ட குறும்படங்கள் சர்வதேச அளவில் பரிசுகள் பெற்றன.

## கற்பவை கற்றபின்...

1. நீங்கள் நாட்டிற்கு உங்கள் பங்கினை அளிக்க விரும்புகிறீர்களா? - இந்திய இராணுவத்தில் சேருவதற்கான தகுதி, அவர்களுக்கான பணிகள் குறித்த கருத்துகளைத் திரட்டி வகுப்பில் கலந்துரையாடுக.
2. எனக்குப் பிடித்த விடுதலைப் போராட்ட வீரர் என்ற தலைப்பில் அவர்தம் வாழ்க்கை நிகழ்வுகளைக் காலக்கோட்டில் உருவாக்குக.

LK9VU6



9th_Tamil_Pages 122-264.indd 185 23-01-2020 20:21:12

கவிதைப் பேழை


# நாடு

ஏ

## சீவக சிந்தாமணி

–திருத்தக்கத் தேவர்

LIYGKX




சங்க இலக்கியங்கள் நிகழ்வுகளில் கருத்தைக் கூறும் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந்தன. அவற்றைத் தொடர்ந்து பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அறக்கருத்துகளைக் கூறுவனவாக இருந்தன. பின்னர், ஒப்பில்லாத தலைவன் ஒருவனது வாழ்க்கையைப் பாடுவனவாய்க் காப்பியங்கள் உருவாயின. இவ்வகையில், சீவகனைத் தலைவனாகக் கொண்டு தோன்றிய காப்பியம் சீவக சிந்தாமணி. இன்பங்களைத் துறந்து துறவு பூணவேண்டும் என்பதே இக்காப்பியத்தின் மையக்கருத்தாகும். ஏமாங்கத நாட்டின் வளத்தைத் திருத்தக்கத்தேவர் வருணிக்கும் பகுதி அந்நாட்டின் செழிப்பை உணர்த்துகிறது.

### ஏமாங்கத நாட்டு வளம்

#### பார் போற்றும் ஏமாங்கதம்

1. *காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்*
*பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து*
*தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்*
*ஏமாங்கதம் என்று இசையால்திசை போயது உண்டே! (31)*

சொல்லும் பொருளும்:
தெங்கு – தேங்காய்; இசை – புகழ்;
வருக்கை – பலாப்பழம்; நெற்றி – உச்சி

#### வாரி வழங்கும் வள்ளல்

2. *வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரைக்*
*கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை*
*உள்ளம் இல்லவர்க்கு ஊர்தொறும் உய்த்துஉராய்*
*வெள்ளம் நாடு மடுத்து விரைந்ததே. (36)*

சொல்லும் பொருளும்:
மால்வரை – பெரியமலை;
மடுத்து – பாய்ந்து; கொழுநிதி – திரண்ட நிதி

#### மணம் கமழும் கழனி

3. *நெறிமருப்பு எருமையின் ஒருத்தல் நீள்இனம்*
*செறிமருப்பு ஏற்றினம் சிலம்பப் பண் உறீஇப்*
*பொறிவரி வராலினம் இரியப் புக்குடன்*
*வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே. (44)*

சொல்லும் பொருளும்:
மருப்பு – கொம்பு; வெறி – மணம்;
கழனி – வயல்; செறி – சிறந்த; இரிய – ஓட



### தலைவணங்கி விளைந்த நெற்பயிர்

*4. சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்*
*மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்*
*செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்*
*கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே*. (53)*

சொல்லும் பொருளும்

சூல் – கரு

### எல்லாம் ஆயிரம் ஆயிரமாய்

*5. அடிசில் வைகல் ஆயிரம் அறப்புறமும் ஆயிரம்*
*கொடியனார் செய் கோலமும் வைகல்தோறும் ஆயிரம்*
*மடிவுஇல் கம்மியர்களோடும் மங்கலமும் ஆயிரம்*
*ஒடிவுஇலை வேறுஆயிரம் ஓம்புவாரின் ஓம்பலே. (76)*

சொல்லும் பொருளும்

அடிசில் – சோறு; மடிவு – சோம்பல்

கொடியனார் – மகளிர்



சீவகசிந்தாமணி–இலம்பகங்கள்

1. நாமகள் இலம்பகம்
2. கோவிந்தையார் இலம்பகம்
3. காந்தருவதத்தையார் இலம்பகம்
4. குணமாலையார் இலம்பகம்
5. பதுமையார் இலம்பகம்
6. கேமசரியார் இலம்பகம்
7. கனகமாலையார் இலம்பகம்
8. விமலையார் இலம்பகம்
9. சுரமஞ்சியார் இலம்பகம்
10. மண்மகள் இலம்பகம்
11. பூமகள் இலம்பகம்
12. இலக்கணையார் இலம்பகம்
13. முத்தி இலம்பகம்

### நாடுகள் சூழ்ந்த ஏமாங்கதம்

*6. நற்றவம் செய்வார்க்கு இடம்தவம் செய்வார்க்கும் அஃது இடம்*
*நற்பொருள் செய்வார்க்கு இடம்பொருள் செய்வார்க்கும் அஃதுஇடம்*
*வெற்ற(ம்) இன்பம் விழைவிப்பான் விண்உவந்து வீழ்ந்தென*
*மற்றநாடு வட்டமாக வைகுமற்ற நாடரோ. (77)*

சொல்லும் பொருளும்

நற்றவம் – பெருந்தவம்; வட்டம் – எல்லை; வெற்றம் – வெற்றி

## பாடலின் பொருள்

1. தென்னை மரத்திலிருந்து நன்றாக முற்றிய காய் விழுகிறது. அது விழுகின்ற வேகத்தில், பாக்கு மரத்தின் உச்சியிலுள்ள சுவைமிக்க தேனடையைக் கிழித்து, பலாப் பழத்தினைப் பிளந்து, மாங்கனியைச்சிதற வைத்து, வாழைப் பழத்தினை உதிர்க்கவும் செய்தது. இத்தகு வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டின் புகழ் உலகின் பலதிசைகளிலும் பரவியிருந்தது.

2. இரந்து கேட்பவர்க்கு இல்லை யென்னாது வாரி வழங்கும் செல்வர்களைப் போன்றது வெள்ளம். அது உயர்ந்த மலையிலிருந்து செல்வக் குவியலைச் சேர்த்துக்கொண்டு வந்து, ஊக்கமில்லாத மக்களுக்கு ஊர்தோறும் வழங்கும் வகையில் நாட்டினுள் விரைந்து பாய்கிறது.

3. அழகான கொம்புகளை உடைய ஆண் எருமைகளும் நேரான கொம்புகளையுடைய வலிமையான எருதுகளும் பேரொலி எழுப்புகின்றன. அவ்வொலி கேட்டுப் புள்ளிகளும் வரிகளும் உடைய வரால் மீன்கள் கலைந்து ஓடுகின்றன. அத்தகு மணம் வீசும் வயலில் உழவர் கூட்டம் வெள்ளம் போல் நிறைந்திருந்தது.

4. கருக்கொண்ட பச்சைப் பாம்புபோல நெற்பயிர்கள் தோற்றம் கொண்டுள்ளன. நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது, செல்வம் பெற்ற பக்குவம் இல்லாதவர் தலைநிமிர்ந்து நிற்பதுபோல் உள்ளது. அப்பயிர்கள் முற்றியவுடன் நெற்கதிர்கள் சாய்ந்திருப்பது, தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப்போல் உள்ளது.



9th_Tamil_Pages 122-264.indd 187 23-01-2020 20:21:12

5. வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில் நாள்தோறும் கிடைக்கும் உணவு வகைகள் ஆயிரம்; அறச்சாலைகள் ஆயிரம்; அங்கே மகளிர் ஒப்பனை செய்துகொள்ள மணிமாடங்கள் ஆயிரம்; மேலும் செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரம்; அதனால் நிகழும் திருமணங்களும் ஆயிரம்; ஏமாங்கத நாட்டில் தவிர்தலின்றி காவல் செய்யும் பாதுகாவலரும் ஆயிரம்.

6. ஏமாங்கத நாடு, உண்மையான தவம் புரிவோர்க்கும் இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகும். நிலையான பொருளைத் தேடுவோர்க்கும் நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இடமாகும். நாடுகள் சூழ்ந்து இருக்கும் எழில்மிகு சிறப்புப் பொருந்திய ஏமாங்கத நாடு வானுலகம் வழங்கும் இன்பம், உலகோர் ஏற்கும் வகையில் தாழ்ந்து மண்ணுலகிற்கு இறங்கி வந்தது போல் திகழ்ந்தது.

## இலக்கணக் குறிப்பு

நற்றவம் – பண்புத்தொகைகள்;

செய்கோலம் – வினைத்தொகை;

தேமாங்கனி (தேன்போன்ற மாங்கனி) – உவமைத்தொகை

இறைஞ்சி – வினையெச்சம்.

கொடியனார் – இடைக்குறை

## பகுபத உறுப்பிலக்கணம்

இறைஞ்சி – இறைஞ்சு+ இ

இறைஞ்சு – பகுதி; இ – வினையெச்ச விகுதி

ஓம்புவார் – ஓம்பு + வ் + ஆர்

ஓம்பு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை;

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி



### நூல் வெளி

சீவக சிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. இது விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியமாகும். 'இலம்பகம்' என்ற உட்பிரிவுகளைக் கொண்டது. 13 இலம்பகங்களைக் கொண்டுள்ள இந்நூல், 'மணநூல்' எனவும் அழைக்கப்படுகிறது. நாமகள் இலம்பகத்தில் நாட்டுவளம் என்னும் பகுதி பாடமாக அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர். சமண சமயத்தைச் சார்ந்த இவர், இன்பச்சுவை மிக்க இலக்கியமும் இயற்றமுடியும் என்று நிறுவும் வகையில் இக்காப்பியத்தை இயற்றினார். இவரது காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. சீவக சிந்தாமணி பாடுவதற்கு முன்னோட்டமாக 'நரிவிருத்தம்' என்னும் நூலை இயற்றினார் என்பர்.

## கற்பவை கற்றபின்...

1. அருகிலுள்ள இயற்கைக் காட்சிகளைக் குறிப்பெடுத்து ஓவியம் தீட்டுக.
2. உங்கள் பள்ளி வேரூன்றிய நாள் தொடங்கி வளர்ந்த வரலாற்றையும் அதன் சிறப்புகளையும் கட்டுரையாக்குக.

LJ8CHK



9th_Tamil_Pages 122-264.indd 188 23-01-2020 20:21:12

கவிதைப் பேழை

# நாடு

எ

# முத்தொள்ளாயிரம்

LJH8P8

நுழையும்முன்

ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர். பிற்காலக் காப்பியங்களில் நாட்டுவளம் தவறாது இடம்பெற்றது. முத்தொள்ளாயிரம் சேரன், சோழன், பாண்டியன் ஆகியோருடைய நாடுகளின் வளங்களை நயமாக வெளிப்படுத்துகிறது.



### 1. சேரநாடு

*அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ*
*வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப் புள்ளினம்தம்*
*கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ*
*நச்சிலைவேல் கோக்கோதை நாடு.**

சொல்லும் பொருளும்: அள்ளல் – சேறு; பழனம் – நீர் மிக்க வயல்; வெரீஇ – அஞ்சி; பார்ப்பு – குஞ்சு.

அணி – தற்குறிப்பேற்ற அணி

### 2. சோழநாடு

*காவல் உழவர் களத்துஅகத்துப் போர்ஏறி*
*நாவலோஓ என்றிசைக்கும் நாளோதை – காவலன்தன்*
*கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தால் போலுமே*
*நல்யானைக் கோக்கிள்ளி நாடு.*

சொல்லும் பொருளும்: 'நாவலோ' – நாள் வாழ்க என்பது போன்ற வாழ்த்து; இசைத்தால் – ஆரவாரத்தோடு கூவுதல்.

அணி – உவமை அணி

### 3. பாண்டியநாடு

*நந்தின் இளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்*
*பந்தர் இளங்கமுகின் பாளையும்–சிந்தித்*
*திகழ்முத்தம் போல்தோன்றும் செம்மற்றே தென்னன்*
*நகைமுத்த வெண்குடையான் நாடு.*

சொல்லும் பொருளும்: நந்து – சங்கு; கமுகு – பாக்கு.

முத்தம் – முத்து

அணி – உவமை அணி



9th_Tamil_Pages 122-264.indd 189 23-01-2020 20:21:13

## பாடலின் பொருள்

*1. சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரக்கு நிறத்தில் செவ்வாம்பல்கள் மெல்ல விரிந்தன. அதைக் கண்ட நீர்ப்பறவைகள் தண்ணீரில் தீப்பிடித்துவிட்டது என்று அஞ்சி விரைந்து தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுக்கி வைத்துக் கொண்டன. அடடா! பகைவர் அஞ்சும் வேலைக் கொண்ட சேரனின் நாட்டில் இந்த அச்சம் இருக்கின்றதே.*

*2. நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போர் மீதேறி நின்றுகொண்டு மற்ற உழவர்களை 'நாவலோ' என்று கூவி அழைப்பர். இவ்வாறு அவர்கள் செய்வது வீரர்கள் போர்க்களத்தில் கொல்யானை மீது ஏறி நின்றுகொண்டு மற்ற வீரர்களை 'நாவலோ' என்று அழைப்பது போலிருந்தது. யானைப்படைகளை உடைய சோழனது நாடு, இத்தகு வளமும் வீரமும் மிக்கது.*

*3. சங்குகள் மணலில் ஈனுகின்ற முட்டைகள் முத்துகள் போலிருக்கின்றன. தரையில் உதிர்ந்துகிடக்கும் புன்னை மொட்டுகள் முத்துகள் போலிருக்கின்றன. பந்தல் போட்டதுபோல் தோன்றும் பாக்கு மரத்தின் பாளையிலிருந்து சிந்தும் மணிகளும் முத்துகள் போலிருக்கின்றன. முத்துகளால் ஆன வெண்கொற்றக் குடையை உடைய பாண்டியனது நாடு இத்தகைய முத்து வளம் மிக்கது.*

## இலக்கணக் குறிப்பு

வெண்குடை, இளங்கமுகு – பண்புத் தொகைகள்

கொல்யானை, குவிமொட்டு – வினைத்தொகைகள்.

வெரீஇ – சொல்லிசையளபெடை

## பகுபத உறுப்பிலக்கணம்

கொண்ட – கொள்(ண்) + ட் + அ

கொள் – பகுதி(ண் ஆனது விகாரம்)

ட் – இறந்தகால இடைநிலை;

அ – பெயரெச்ச விகுதி

### நூல் வெளி

வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம்; மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது. மூன்று மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்ட 900 பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் முத்தொள்ளாயிரம் என்று பெயர்பெற்றது. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் நூலிலிருந்து 108 செய்யுள்கள் கிடைத்துள்ளன. அவை முத்தொள்ளாயிரம் என்னும் பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.ஆசிரியரின் பெயரை அறியமுடியவில்லை. இவர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். சேரநாட்டை அச்சமில்லாத நாடாகவும் சோழநாட்டை ஏர்க்களச் சிறப்பும் போர்க்களச் சிறப்பும் உடைய நாடாகவும் பாண்டிய நாட்டை முத்துடை நாடாகவும் பாடப்பகுதி காட்டுகிறது.

## கற்பவை கற்றபின்...

1. *நீங்கள் வசிக்கும் பகுதி, வேந்தருள் யார் ஆண்ட நாடு என்பதை அறிந்து அவர்களைப் பற்றிய செய்தித் தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.*
2. *நெல் விதைப்பது முதல் அரிசி புடைப்பது வரை வயற்களக் காட்சியை அறிந்து தகுந்த படங்களுடன் வகுப்பறையில் காட்சிப்படுத்துக.*

LJR4QV



9th_Tamil_Pages 122-264.indd 190 23-01-2020 20:21:13

நாடு


ஏ

கவிதைப் பேழை

# மதுரைக்காஞ்சி

–மாங்குடி மருதனார்

KFAKHX




மதுரையைச் சிறப்பித்துப் பாடியுள்ள நூல்களுள் பதினெண் மேற்கணக்கின், மதுரைக்காஞ்சி முதன்மையானது. இந்நூலில் மதுரை மாநகர் மக்களின் வாழ்விடம், கோட்டை கொத்தளம், அந்நகரில் நிகழும் திருவிழாக்கள், பலவகைப் பள்ளிகள், நாற்பெருங்குழு, அந்தி வணிகம் ஆகிய காட்சிகள் கவித்துவமாய் விரிந்துள்ளன. காலை தொடங்கி மறுநாள் விடியல்வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்ணுற்றதை முறைப்படுத்திக் கூறுவது போன்ற வருணனைப் பாடல் இது.

## மதுரை மாநகர்

*மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்*
*விண்உற ஓங்கிய பல்படைப் புரிசை*
*தொல்வலி நிலைஇய, அணங்குடை நெடுநிலை*
*நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்*
*மழைஆடும் மலையின் நிவந்த மாடமொடு*
*வையை அன்ன வழக்குடை வாயில்*
*வகைபெற எழுந்து வானம் மூழ்கி*
*சில்காற்று இசைக்கும் பல்புழை நல்இல்*
*ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்*
*பல்வேறு குழாஅத்து இசைஎழுந்து ஒலிப்ப*
*மாகால் எடுத்த முந்நீர் போல*
*முழங்கிசை நன்பணை அறைவனர் நுவல*
*கயம் குடைந்தன்ன இயம்தொட்டு இமிழிசை*
*மகிழ்ந்தோர் ஆடும் கலிகொள் சும்மை*
*ஓவுக் கண்டன்ன இரு பெரு நியமத்து*

*(அடிகள் 351–365)*



9th_Tamil_Pages 122-264.indd 191
23-01-2020 20:21:13



மண்வரை ஆழ்ந்த தெளிந்த அகழி,
விண்ணை முட்டும் கற்படை மதில்கள்,
தொன்மை உடைய வலிமை மிக்க
தெய்வத் தன்மை பொருந்திய நெடுவாசல்,
பூசிய நெய்யால் கறுத்த கதவுகள்,
முகில்கள் உலவும் மலையொத்த மாடம்,
வற்றாத வையைபோல் மக்கள் செல்லும் வாயில்,
மாடம் கூடம் மண்டபம் எனப்பல
வகைபெற எழுந்து வானம் மூழ்கி
தென்றல் வீசும் சாளர இல்லம்,
ஆற்றைப் போன்ற அகல்நெடும் தெருவில்
பலமொழி பேசுவோர் எழுப்பும் பேச்சொலி,
பெருங்காற்று புகுந்த கடலொலி போல
விழாவின் நிகழ்வுகள் அறையும் முரசு,
நீர்குடைந்ததுபோல் கருவிகளின் இன்னிசை,
கேட்டோர் ஆடும் ஆரவார ஓசை,
ஓவியம் போன்ற இருபெரும் கடைத் தெருக்கள்.



### பாடலின் பொருள்

மதுரை மாநகரில் ஆழமான தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது. பழைமையானதும் வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. அவ்வாயில் நெய்பூசியதால் கருமையடைந்த வலிமையான கதவுகளை உடையது. மேகங்கள் உலாவும் மலைபோல் மாளிகைகள் உயர்ந்து உள்ளன. இடைவிடாது ஓடுகின்ற வையை ஆற்றைப்போல மக்கள் எப்போதும் வாயில்கள்வழிச் செல்கின்றனர்.

மண்டபம், கூடம், அடுக்களை எனப் பல்வேறு பிரிவுகளைக்கொண்டு வான்வரை ஓங்கிய தென்றல் காற்று இசைக்கும் பல சாளரங்களையுடைய நல்ல இல்லங்கள் உள்ளன. ஆறு போன்ற அகலமான நீண்ட தெருக்களில் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலிபோல் ஒலிக்கிறது. இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கையால் குடைந்து விளையாடும் தன்மைபோல எழுகிறது. அதனைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும் அல்லங்காடியும் ஓவியங்கள்போலக் காட்சியளிக்கின்றன.



9th_Tamil_Pages 122-264.indd 192 23-01-2020 20:21:13



### தெரியுமா?

"பொறிமயிர் வாரணம் ...
கூட்டுறை வயமாப் புலியொடு குழும" (மதுரைக்காஞ்சி 673 – 677 அடிகள்) என்ற அடிகளின் மூலமாக மதுரையில் வனவிலங்குச் சரணாலயம் இருந்த செய்தியை மதுரைக் காஞ்சியின் மூலம் அறியலாம்.

பத்துப்பாட்டு ஆராய்ச்சி – மா. இராசமாணிக்கனார்

### சொல்லும் பொருளும்

புரிசை – மதில்; அணங்கு – தெய்வம்; சில்காற்று – தென்றல்; புழை – சாளரம்; மாகால் – பெருங்காற்று; முந்நீர் – கடல்; பணை – முரசு; கயம் – நீர்நிலை; ஓவு – ஓவியம்; நியமம் – அங்காடி.

### இலக்கணக் குறிப்பு

ஓங்கிய – பெயரெச்சம்; நிலைஇய – சொல்லிசை அளபெடை; குழாஅத்து – செய்யுளிசை அளபெடை; வாயில் – இலக்கணப் போலி.

மா கால் – உரிச்சொல் தொடர்; முழங்கிசை, இமிழிசை – வினைத்தொகைகள்.

நெடுநிலை, முந்நீர் – பண்புத் தொகைகள்; மகிழ்ந்தோர் – வினையாலணையும் பெயர்.

### பகுபத உறுப்பிலக்கணம்

ஆழ்ந்த – ஆழ் + த்(ந்) + த் + அ

ஆழ் – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்);

த் – இறந்தகால இடைநிலை;
அ – பெயரெச்ச விகுதி.

ஓங்கிய – ஓங்கு + இ(ன்) + ய் + அ

ஓங்கு – பகுதி;
இ(ன்) – இறந்தகால இடைநிலை

ய் – உடம்படுமெய் அ – பெயரெச்ச விகுதி.

மகிழ்ந்தோர் – மகிழ் + த்(ந்) + த் + ஓர்

மகிழ் – பகுதி;

த் – சந்தி (ந் ஆனது விகாரம்);

த் – இறந்தகால இடைநிலை;

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி



### நூல் வெளி

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி. காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள். மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது. இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதைப் 'பெருகுவள மதுரைக்காஞ்சி' என்பர். இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

மதுரைக்காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

## கற்பவை கற்றபின்...

1. *உங்கள் ஊரின் பெயர்க் காரணத்தை எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.*
2. *தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட உலகின் தொன்மை நகரங்களில் ஒன்று மதுரை. அந்நகரத்தில் இயலும் இசையும் நாடகமும் பொங்கிப் பெருகின – இத்தொடர்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில் கருத்துகளைத் திரட்டி ஐந்து மணித்துளிகள் பேசுக.*

KFJGYK



9th_Tamil_Pages 122-264.indd 193 23-01-2020 20:21:13

விரிவானம்

நாடு

ஏ

# சந்தை

KFTD18

நுழையும்முன்

வண்டிப் பட்டைகளின் தொடர்ந்த தாளக்கட்டோடு, இழுத்துச் செல்கிற மாடுகளின் கழுத்துமணி ஓசையோடு சந்தைக்குப் பொருள் கொண்டுபோவதும் பொருள் வாங்கிவருவதுமான மகிழ்ச்சி பெருநகரங்களில் தொலைந்துவிட்டது. இருப்பினும், இன்றும் சில இடங்களில் சந்தை மரபு இருந்துகொண்டுதான் இருக்கிறது. பல்பொருள் அங்காடிகளின் வருகை, வணிகருக்கும் மக்களுக்குமான உறவைக் குறைத்து வருகிறது. சந்தையில் வணிகம் மட்டுமல்லாமல் வாங்குபவரின் மனநிறைவும் பேணப்பட்டது. தலைமுறை தலைமுறையாகப் பொருள்களை விற்பவர் – வாங்குபவர் உறவு வளர்த்த சந்தை வணிகம் அறியப்படவேண்டிய ஒன்று.



பூஞ்சோலை கிராமத்திலிருந்து புதுச்சேரியில் உள்ள தம்முடைய மகள் வீட்டிற்கு வந்திருக்கிறார் பெரியவர் தணிகாசலம். இவர், தம் ஊரில் மரபுவழி வேளாண்மை செய்பவர். ஊராட்சித் தலைவராகவும் தொண்டாற்றிய அனுபவம் மிக்கவர். ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் பெயரன் மூர்த்தியும் நான்காம் வகுப்பில் படிக்கும் பெயர்த்தி கீர்த்தனாவும் அவருடன் நடத்திய உரையாடலின் சிறு பகுதி.



9th_Tamil_Pages 122-264.indd 194 23-01-2020 20:21:14

கீர்த்தனா: தாத்தா! எங்க ஊர்ல புதுசா 'மால்' திறந்திருக்காங்க, வர்றீங்களா போய்ப் பார்த்துட்டு வரலாம்?

தாத்தா: 'மால்'னா, என்ன கண்ணு பொருள்?

மூர்த்தி: ஒரே இடத்துல எல்லாக் கடைகளும் இருக்கும் தாத்தா. குண்டூசியிலிருந்து கணினி வரைக்கும் வாங்கலாம். பல்லங்காடியகம்னு சொல்லலாம்.

தாத்தா: பழங்காலத் தமிழ் இலக்கியத்தில் 'நாளங்காடி', 'அல்லங்காடி' என்பார்களே அது மாதிரியா?

மூர்த்தி: நாளங்காடி, அல்லங்காடியா? ஒன்னும் புரியலியே?

தாத்தா: பகலில் செயல்படும் கடைவீதிகளை 'நாளங்காடி' என்றும் இரவில் செயல்படும் கடைவீதிகளை 'அல்லங்காடி' என்றும் சொல்வாங்க. நாள் என்றால் பகல்; அல் என்றால் இரவு.

மூர்த்தி: நீங்க கடைவீதியைப் பத்தி சொல்றீங்க. அது இல்ல தாத்தா இது. இங்க ஒரே கட்டடத்துல கடைகள், திரைப்பட அரங்கு, உணவகம், கேளிக்கை அரங்குகள்-ன்னு எல்லாமே இருக்கும் தாத்தா.

கீர்த்தனா: தாத்தா, அவன் ஏதாவது பேசிகிட்டே இருப்பான். நீங்க கிளம்புங்க போயிட்டு வரலாம்.

தாத்தா: சரி கண்ணு. நீதான் கிளம்பணும். நான் தயாராகத்தான் இருக்கேன். எங்க காலத்துச் 'சந்தை' தான் இப்ப வளர்ந்து, நீங்க சொல்ற 'மால்' ஆயிடுச்சா மூர்த்தி?

மூர்த்தி: சந்தையா? அது எப்படி இருக்கும்? நான் மேல்நிலை வகுப்பில் வணிகவியல் எடுத்துப் படிக்கலாம்னு இருக்கேன். அதனால அதைப்பற்றித் தெளிவாச் சொல்லுங்க தாத்தா.

தாத்தா: மனுசங்க நாடோடியா வேட்டையாடி வாழ்ந்த காலத்துல அவங்களுக்குக் கிடைச்ச உணவை அவங்களுக்குள்ளாவே பகிர்ந்துகிட்டாங்க. அதனால் அந்தக் காலத்துல பொதுச் சந்தைன்னு ஒன்னு தேவைப்படலை. பின்னாடி காலம் மாறி உற்பத்திப்பெருக்கம் ஏற்பட்டபோது தமிழ்நாட்டின் நால்வகை நிலங்களில் வாழ்ந்த மக்களோட தேவை, பயன்பாடு, உற்பத்தி ஆகியவை பெருகின. ஒன்றைக் கொடுத்து இன்னொன்று வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. விற்று வாங்குவதும், வாங்கி விற்பதுமான பண்டமாற்று முறை உண்டாச்சு.

கீர்த்தனா: தாத்தா கிளம்புங்க. இங்க இருந்து பக்கம்தான் நடந்தேகூட போயிடலாம்.

மூர்த்தி: எதுக்கு கீர்த்தனா தாத்தாவ நச்சரிக்கிற? தாத்தா சந்தையைப் பற்றிச் சொல்லி முடிக்கட்டும், அப்புறம் போகலாம்.

தாத்தா: பரவாயில்ல மூர்த்தி, நடந்துகிட்டே சொல்றேன் வா.

(மூவரும் தெருவில் இறங்கி நடந்து செல்கின்றனர்.)

மூர்த்தி : பண்டமாற்றுமுறை என்றால் காசு பணம் இல்லாம செய்கிற சிறு வணிகம் தானே. அது எப்படி தாத்தா சந்தை முறையா மாறிச்சு?

தாத்தா: கிராமத்து மக்கள் தங்களோட நிலத்தில் விளையும் காய்கறி, கீரை, தானியம் போன்ற பொருள்களை விற்கவும் தேவையான மாற்றுப் பொருள்களை வாங்கவும் விரும்பி முச்சந்தி, நாற்சந்தின்னு மக்கள் கூடும் இடங்களில் கடை விரிச்சாங்க. இதுதான் சந்தைங்கிற பொது வணிக இடமாகப் பின்னால் மாறியது.

கீர்த்தனா: தாத்தா! அங்க பாருங்க எவ்வளவு பெரிய விளம்பரம் வச்சிருக்காங்க.

தாத்தா: இப்பல்லாம் விளம்பரம் இல்லன்னா வியாபாரமே இல்லன்னு ஆயிடுச்சு. ஆளுக்கு ஒப்பனை செய்தது பத்தாதுன்னு இப்ப ஆப்பிளுக்கே ஒப்பனை செய்கிறார்கள். பிரபலங்களை வைத்து விளம்பரம் கொடுத்துச் செய்வதுதான் கல்லா



9th_Tamil_Pages 122-264.indd 195 23-01-2020 20:21:14

கட்டும் தந்திரம்னு ஆயிடுச்சு! ஆனா, சமூகம் சார்ந்து உண்டான கிராமச்சந்தையில் அப்படி இல்ல. கலப்படம் இல்லாத நேர்மைதான் கிராமச்சந்தையோட அடிப்படை. ஒரு குறிப்பிட்ட ஊரை மையப்படுத்தி நூற்றுக்கணக்கான கிராம மக்கள் இப்படி நேர்மையா தங்களோட பொருள்களைப் பகிர்ந்துக்கிட்டாங்க.

மூர்த்தி: முதல்ல 'சந்தை'ன்னு சொல்லிட்டு, அப்புறம் ஏன் அத கிராமச்சந்தைன்னு மாத்திச் சொல்றீங்க தாத்தா.

தாத்தா: உள்ளூர்த் தேவைக்கு ஏற்ற மாதிரி, அங்க விளைகிற உணவுப் பொருள்களையும் விவசாயம், சமையல், வீடு ஆகியவற்றுக்குத் தேவையான பொருள்களையும் சிறிய அளவில் விற்கிற சிறு வணிகச் செயல்பாடுதான் கிராமச்சந்தை. மக்களோட அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யறதுதான் அதோட நோக்கம். நம்ம மனசை மயக்கிற மாதிரி வெறும் மிகைவரவு சார்ந்து இயங்குவது புதிய சந்தை. அதிலிருந்து வேறுபடுத்தத்தான் அப்படிச் சொன்னேன்.

மூர்த்தி: சந்தையில என்னவெல்லாம் வாங்கலாம் தாத்தா?

தாத்தா: கிராமச்சந்தையில கிடைக்காத பொருள்களே இல்லை. கடுகு, சீரகத்தில் இருந்து உணவுத் தானியங்கள், காய்கறிகள்; கோழி, ஆடு, மாடு, குதிரைன்னு கால்நடைகள்; சோப்பு, சீப்பு, கண்ணாடி, வளையல்கள் போன்ற அலங்காரப் பொருள்கள்; இரும்புப் பொருள்கள், பாத்திரங்கள், துணிமணிகள்னு ஒரு குடும்பத்துக்கு, தொழிலுக்குத் தேவையான எல்லாத்தையும் வாங்கலாம். அது மட்டுமல்லாம பல பேருக்கு வேலை வாய்ப்பையும் கொடுத்தது கிராமச்சந்தை.

மூர்த்தி: காய்கறி, தானியம் சந்தையில விற்பார்கள் என்று சொன்னீங்க. ஆடு மாடுங்கள ஏன் தாத்தா சந்தையில விற்கிறாங்க?

தாத்தா: மக்கள் நாகரிகம் குறிஞ்சி நிலத்துல வேரூன்றி, முல்லை நிலத்துல வளர்ந்து, மருதத்துல முழுமையும் வளமையும் அடைஞ்சுது. எல்லா நிலங்களிலும் மக்களுக்கு ஆடு, மாடுகளோடு தொடர்பு இருந்துகிட்டே இருக்கு. உழவுத் தொழில்ல மனுசனுக்குப் பக்கபலமா மட்டுமில்ல, இணையாகவும் துணையாகவும் கால்நடைங்க இருந்திருக்கு. அந்த வகையிலதான் அவற்றோட தேவை அதிகமாகி வாங்க வேண்டிய, விற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கு. கால்நடைச் சந்தை தமிழ்நாடு முழுவதும் இருக்கு. மதுரைப்பக்கம் மாட்டுச் சந்தைய 'மாட்டுத்தாவணி'ன்னு சொல்லுவாங்க. தாவணின்னா சந்தைன்னு பொருளாம். இப்ப மதுரைப் பேருந்து நிலையம் இருக்கிற இடம் அது.

கீர்த்தனா: கிராமச்சந்தை பத்திக் கேக்கவே ஆர்வமா இருக்கு. மேல சொல்லுங்க தாத்தா.

தாத்தா: கழைக்கூத்தும் பொம்மலாட்டமும் கிராமச்சந்தையில் உண்டு. சந்தைக்குப் போறது எங்க காலத்துல திருவிழாவிற்குப் போகிற மாதிரி; அக்கம் பக்கத்து ஊர் உறவுகளைச் சந்தித்துப் பேசலாம்; சாதி மதத்தைத் தாண்டி எல்லோருடனும் பழக முடியும்; ஆண்-பெண் பேதமில்லாம, ரெண்டு பேரும் சந்தைச் செயல்பாடுகள்ல



**தெரியுமா?**

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளிச் சந்தை 18 ஏக்கர் பரப்பில் எட்டாயிரம் கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுகிறது. பல ஊர்களைச் சேர்ந்த மக்கள், தக்காளி முதல் தங்கம் வரை வாங்குவதற்குக் கூடுகிறார்கள். விற்பவரும் வாங்குபவரும் உறவுகளாய்ப் பேசி மகிழும் ஆரவாரம் அங்கே ஒலிக்கிறது. 125 ஆண்டுகள் வயதான அச்சந்தையில் நான்கு தலைமுறை நட்பு நிலவுகிறது. கலப்படமில்லாத பொருள்களை வருவாய் நோக்கின்றி அச்சந்தை இன்றும் விற்பனை செய்கிறது.



9th_Tamil_Pages 122-264.indd 196 23-01-2020 20:21:14

கலந்துக்குவாங்க; மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் தலைமுறை தலைமுறையா தொடர்பும் நட்பும் இருக்கும்; வாரம் ஒருமுறை உறவுக்காரர்களைப் பார்த்துட்டு வர்ற மாதிரி ஒரு மகிழ்ச்சி இருக்கும்.

மூர்த்தி: பூஞ்சோலை வீட்டுல அத்தனை ஆடுமாடு இருக்கே எல்லாமே சந்தையில் வாங்கியதுதானா?

தாத்தா: சந்தையில் வாங்கியதும் உண்டு, வீட்டிலேயே பிறந்து வளர்ந்ததும் உண்டு. சந்தையில ஆடு, மாடு வாங்குவதை இப்ப நினைச்சா வேடிக்கையா இருக்கும். துண்டைப் போட்டுக் கைகளை மறைச்சுக்கிட்டு விலை பேசுவது ஒரு உத்தி. கொம்பு, பல், வால், திமிலைப் பார்த்து மாட்டோட வயசு, வலிமையைக் கண்டுபிடிக்கிறது ஒரு தனித்திறமை. நான் தஞ்சாவூர்ச் சந்தையில மாட்டை வாங்கி, அதைக் கொள்ளிடம் வழியா நடந்தே ஒரு வாரம் ஓட்டி வந்திருக்கேன்.

மூர்த்தி: ஆடு மாடுகளை மட்டுந்தான் சந்தையில் விற்பனை செய்வாங்களா தாத்தா?

தாத்தா: யார் சொன்னது? ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு சந்தைக்குப் பேர் போனது. மணப்பாறைன்னு சொன்னா மாட்டுச்சந்தை, அய்யலூர்னா ஆட்டுச் சந்தை, ஒட்டன்சத்திரம்னா காய்கறிச் சந்தை, நாகர்கோவில் தோவாளைன்னா பூச்சந்தை, ஈரோடுன்னா ஜவுளிச் சந்தை, கடலூருக்குப் பக்கமா இருக்கிற காராமணி குப்பம்னா கருவாட்டுச் சந்தை, நாகப்பட்டினம்னா மீன் சந்தை இப்படித் தமிழ்நாடு முழுதும் பல சந்தைகள் இருக்கு. இவை தவிர ஒவ்வொரு வட்டாரத்திலும் கிராமச் சந்தைகள் ஏராளம். கிழமையைக் கணக்கு வைத்து ஒவ்வொரு ஊர்ச் சந்தைக்கும் சென்று வரும் வியாபாரிகள் உண்டு. எந்தச் சந்தையில் எது சிறப்பு, எது விலை மலிவு என அனுபவத்தில் அறிந்து வாங்கிவர ஊர் ஊராகச் செல்லும் மக்களும் உண்டு.

கீர்த்தனா: அங்கே அதோ தெரியுது பாருங்க தாத்தா பெரிய கட்டடம். அதுதான் 'மால்'.



**தெரியுமா?**

இன்றைக்கும் தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும், வாரச் சந்தைகளும் மாதச் சந்தைகளும் குறிப்பிட்ட சில பொருள்களை மட்டும் விற்கும் சந்தைகளும் மாலை நேரச் சந்தைகளும் நடந்தவண்ணம் உள்ளன.



மூர்த்தி: இந்த மாதிரி பன்னாட்டு அறிவியல் தொழில் நுட்பத்தோட இயங்குற வணிக வளாகங்களுக்கும் கிராமச்சந்தைகளுக்கும் என்ன வேறுபாடு? தாத்தா!

தாத்தா: நவீன சந்தையில் உற்பத்தி செய்கிறவன் ஒருத்தன்; மொத்தமாக வாங்குகிறவன் வேறு ஒருத்தன். சில்லறையாக விற்கிறவன் இன்னொருத்தன்னு இருப்பாங்கன்னு நினைக்கிறேன். கிராமச்சந்தையில உற்பத்தியாளன்தான் விற்பனையாளன். பெரும்பாலும் இடைத்தரகர்களுக்கு வேலை இல்ல. குளிரூட்டப்பட்ட அறை இல்லை. வாடகை இல்லை. விற்கிறவனும் வாங்குகிறவனும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தால் அதுதான் பொருளோட விலை.

கீர்த்தனா: இதோ வந்தாச்சு. வாங்க அந்தத் தானியங்கிப் படிக்கட்டில் ஏறி மேலே போகலாம்.

தாத்தா: நீ என்ன வாங்கணும் மூர்த்தி?

மூர்த்தி: எனக்கு ஒன்னும் வேணாம் தாத்தா. கீர்த்திதான் பாக்கறதெல்லாம் கேப்பா.



9th_Tamil_Pages 122-264.indd 197 23-01-2020 20:21:14

(நடக்கிறவர்கள் பேசிக்கொள்வதும் இயந்திரங்களின் ஓசைகளும் பேரிரைச்சலை ஏற்படுத்தின.)

மூர்த்தி: 'சந்தைக்கடைச் சத்தம்' அப்படின்னு சொல்வாங்களே அதுவும் இந்தச் சத்தமும் ஒண்ணா தாத்தா?

தாத்தா: சந்தைக்கடை சத்தமாத்தான் இருக்கும். ஆனா இந்த மாதிரி இரைச்சலா இருக்காது. சந்தை வெறும் உதட்டு வியாபாரம் மட்டும் பேசும் களம் இல்லை. வாங்க வாங்க என ஏதோ கல்யாண வீடு போல வரவேற்று நலம் விசாரித்த பிறகுதான் ஒவ்வொரு கடையிலும் வியாபாரம் நடக்கும். விசாரிப்புகளுக்கு மத்தியில் ஓர் உறவுக் கம்பி இழையோடும். இதனால, உரிய வயசுல பேச்சு வராத குழந்தைங்களைச் சந்தைக்குக் கூட்டிக்கிட்டுப் போவோம். சந்தையில கேக்குற சொற்களையும் பலவித குரல் ஏற்ற இறக்கங்களையும் உள்வாங்கிக்கிற குழந்தைங்களுக்குப் பேச்சு வந்துவிடும்.

(கீர்த்தனா ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த பெரிய குரங்கு பொம்மை ஒன்றைத் தொட முயன்றாள். கடையின் வேலையாள் தொடக்கூடாதெனக் கீர்த்தனாவிற்குச் சைகை காட்டினார்.)

தாத்தா: பார்த்தியா? பொம்மையைத் தொடக்கூடாதுன்னு சொல்கிறார். குழந்தைகளை நாட்டுச்சந்தைக்குக் கூட்டிக்கொண்டு போனால், கடையில் இருக்கும் தக்காளி, கேரட் எனக் குழந்தை எதை எடுத்தாலும் அதற்குக் காசு இல்லை. குழந்தையின் ஆசையில் வணிகம் குறுக்கிடாது.

மூர்த்தி: வியாபாரத்துல கருணைக்கு இடம் கொடுத்தா, முதல் தேறாதே தாத்தா.

தாத்தா: நாட்டுச் சந்தையில் வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு என்பது வெறுமனே பொருளை விற்று வாங்குவதோடு முடிந்துபோவதில்லை. சந்தையில் பார்த்துப் பழகியவர்கள் சம்பந்திகளாகி உறவினர்கள் ஆகிவிடுவதுமுண்டு! சந்தையின் சாதாரண விசாரிப்புகளிலும் நேசம் உண்டு, நேர்மை உண்டு.

கீர்த்தனா: தாத்தா அங்கே பாருங்க அந்தக் குழந்தை பொம்மை எவ்ளோ பெருசா இருக்கு? விலை அதிகமா இருக்குமோ தாத்தா?

தாத்தா: விலையைப் பத்தி என்ன இருக்கு. உனக்குப் பிடிச்சிருக்கா சொல்லு.

கீர்த்தனா: 'ஏம்மா, இவ்வளவு பெரிய பொம்மைய வாங்கியாந்தே?'ன்னு அம்மா சத்தம் போடும் தாத்தா.

தாத்தா: அதை நான் பார்த்துக் கொள்கிறேன். (பொம்மை வாங்குகிறார்கள்) உனக்கு ஏதும் வேணுமா மூர்த்தி?

மூர்த்தி: வேணாம் தாத்தா. பழக்கூழ் வேணும்னா குடிக்கலாம் தாத்தா.

தாத்தா: சரி. குடிக்கலாம். எனக்குப் பனிக் கட்டி போடாமல் வாங்கு.

(மூவரும் பழக்கூழ் அருந்தியவாறே உரையாடுகின்றனர்)

மூர்த்தி: இவ்வளவு பிரம்மாண்டமான கடையில பல அடுக்குகளில் பொருள்களைக் குவிச்சு வெச்சிருக்காங்க.

தாத்தா: ஆமா. யார்யாருக்கு எது வேணுமோ அததுக்குத் தனித்தனியான பகுதிகள் இருக்கு. தேவைக்கும் அளவுக்கும் ஏற்பப் பொருள்களை நாமே தேர்ந்தெடுக்கலாம் போல.

கீர்த்தனா: ஆமா, தாத்தா பெரும்பாலும் பல அளவுள்ள பொட்டலங்கள் போட்டு வைத்திருக்காங்க. கெடுநாளும் குறிச்சிருப்பாங்க. நாமதான் பாத்து வாங்கணும். சரி வீட்டுக்குப் போலாம் தாத்தா.

தாத்தா: சரி, வாங்க போகலாம்

மூர்த்தி: இந்தமாதிரி அங்காடிகள் பலபேருக்கு நிரந்தர வேலை கொடுக்குது தாத்தா.



9th_Tamil_Pages 122-264.indd 198 23-01-2020 20:21:14

தாத்தா: அப்படிச் சொல்ல முடியாது. நிரந்தரப் பணியாளர் குறைச்சலாத்தான் இருப்பாங்க. தற்காலிகப் பணியாளர்தான் அதிகம். பலபேர் வந்து கொஞ்சநாள் வேலை பார்த்துட்டுப் போயிடுவாங்க.

கீர்த்தனா: பொருள்களை விற்கணும். தீர்ந்தவுடனே வாங்கிவைக்கணும். பெரிய வேலைதான் தாத்தா.

தாத்தா: இதுபோன்ற கடைகளைத் திட்டமிட்டாத்தான் நிருவகிக்க முடியும். அதற்கேற்ப மேலாண்மை, கண்காணிப்பு, கட்டமைப்பு வசதி, தொடர் பராமரிப்புன்னு இதன்பின்னால ஏகப்பட்ட தொடர் செயல்பாடுகள் இருக்கு. கிராமச்சந்தைல இருக்கறமாதிரி இங்க யார்வேண்ணாலும் கடை வைத்துவிட முடியாது. பெரிய அளவுல முதலீடு தேவைப்படும். (மூவரும் வீட்டை அடைந்தார்கள்)

கீர்த்தனா அம்மா: எதுக்குமா இவ்வளவு பெரிய பொம்மை? ஏற்கனவே நிறைய பொம்மைங்க இருக்கே!

தாத்தா: விடும்மா. குழந்தை ஆசையா கேட்டா. நான்தான் வாங்கித்தந்தேன்.

அம்மா: மூர்த்தி ஒன்னும் வாங்கலையாப்பா?

மூர்த்தி: கீர்த்தனா, அவ ஆசைப்பட்ட பொம்மையை வாங்கிக்கிட்டா. நானும் என்



பொதியை ஏத்தி வண்டியிலே
பொள்ளாச்சி சந்தையிலே
விருதுநகர் வியாபாரிக்கு – செல்லக்கண்ணு
நீயும் வித்துப்போட்டுப் பணத்த எண்ணு
செல்லக்கண்ணு. –பாடலாசிரியர் மருதகாசி

படிப்புக்குத் தேவையான சந்தைபற்றிய விவரங்களைத் தாத்தாவிடம் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டேன். அந்தக் காலத்துச் சந்தையில மக்கள் பணத்தைவிட மனித மாண்புகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாங்க என்பதை நினைத்தாலே பெருமையா இருக்கு.

அம்மா: ஆமா, நானும் சந்தைக்குப் போயிருக்கேன். சந்தைன்னாலே சந்தோசம் தானா வரும். சரி வாங்க. தாத்தா ஊர்ச் சந்தையிலிருந்து வாங்கி வந்த காய்கறியில குழம்பு வெச்சுருக்கேன், சாப்பிடுங்க.

## கற்பவை கற்றபின்...

1. சந்தை நிகழ்வுகளை நாடகமாக நடித்துக் காட்டுக.
2. சந்தை/அங்காடியில் இருக்கும் பொருள்களுக்கான விலைப்பட்டியல் எழுதிய விளம்பரப் பதாகை ஒன்றை உருவாக்குக.
3. சிறு வணிகர் ஒருவரிடம் நேர்காணல் செய்க.
(எ.கா. சந்தைப் பொருள்கள் மீதமானால் என்ன செய்வீர்கள்?)
4. "கடன் அன்பை முறிக்கும்" இது போன்ற சொற்றொடர்களைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், சந்தைகளில் பார்த்து எழுதுக.

KG392V



9th_Tamil_Pages 122-264.indd 199 23-01-2020 20:21:14

கற்கண்டு

நாடு

எ

# ஆகுபெயர்

KGC54I

'கலாம் சாட் கண்டுபிடித்த பள்ளி மாணவனை ஊரே பாராட்டியது.'

'பெண்களைக் கேலி செய்த இளைஞரை ஊரே இகழ்ந்தது.'

இத்தொடர்களில் ஊர் பாராட்டுவதோ, திட்டுவதோ இல்லை. மாறாக, அவ்வூரில் உள்ள மக்கள் பாராட்டினர் / இகழ்ந்தனர் என்பது இதன் பொருள். ஊர் என்னும் பெயர், ஊரில் உள்ள மக்களுக்கு ஆகிவந்தது. இதனை இடவாகுபெயர் என்பர்.

ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். ஆகுபெயர்கள் பதினாறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன . அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சில –

| | | |
|---|---|---|
| முல்லையைத் தொடுத்தாள் |  | பொருளாகுபெயர் (முதலாகுபெயர்) – முதற்பொருளாகிய முல்லைக்கொடி, அதன் சினை(உறுப்பு)யாகிய பூவுக்கு ஆகி வந்தது. |
| வகுப்பறை சிரித்தது |  | இடவாகுபெயர் – வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது. |
| கார் அறுத்தான் |  | காலவாகுபெயர் – கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது. |
| மருக்கொழுந்து நட்டான் |  | சினையாகுபெயர் – மருக்கொழுந்து என்னும் சினைப் (உறுப்பு) பெயர், அதன் செடிக்கு ஆகிவந்தது. |
| மஞ்சள் பூசினாள் |  | பண்பாகுபெயர் – மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகிவந்தது. |
| வற்றல் தின்றான் |  | தொழிலாகுபெயர் – வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வந்தது. |
| வானொலி கேட்டு மகிழ்ந்தனர் |  | கருவியாகுபெயர் – வானொலி என்னும் கருவி, அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது. |
| பைங்கூழ் வளர்ந்தது |  | காரியவாகுபெயர் – கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது. |



9th_Tamil_Pages 122-264.indd 200 23-01-2020 20:21:15

| | | |
|---|---|---|
| அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன் |  | கருத்தாவாகுபெயர் – அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது. |
| ஒன்று பெற்றால் ஒளிமயம் |  | எண்ணலளவை ஆகுபெயர் – ஒன்று என்னும் எண்ணுப் பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்தது. |
| இரண்டு கிலோ கொடு |  | எடுத்தலளவை ஆகுபெயர் – நிறுத்தி அளக்கும் எடுத்தல் என்னும் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |
| அரை லிட்டர் வாங்கு |  | முகத்தலளவை ஆகுபெயர் – முகந்து அளக்கும் முகத்தல் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |
| ஐந்து மீட்டர் வெட்டினான் |  | நீட்டலளவை ஆகுபெயர் – நீட்டி அளக்கும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |

## கற்பவை கற்றபின்...

KGL166

1. ஆகுபெயரைத் எடுத்தெழுதுக.
   - அ. தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைந்தாள்.
     தமிழரசி வள்ளுவரைப் படித்தாள்.
   - ஆ. மாமாவின் வருகைக்கு வீடே மகிழ்கிறது.
     நாடும் வீடும் நமது இரு கண்கள்.
   - இ. கலைச்செல்வி பச்சைநிற ஆடையை உடுத்தினாள்.
     கலைச்செல்வி பச்சை உடுத்தினாள்.
   - ஈ. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.
     நாலடி நானூறும் இரண்டடித் திருக்குறளும் வாழ்வுக்கு உறுதி தரும்.
   - உ. ஞாயிற்றை உலகம் சுற்றி வருகிறது.
     நீங்கள் கூறுவதை உலகம் ஏற்குமா?
2. ஆகுபெயர் அமையுமாறு தொடர்களை மாற்றி எழுதுக.
   - அ. மதுரை மக்கள் இரவிலும் வணிகம் செய்கின்றனர்.
   - ஆ. இந்திய வீரர்கள் எளிதில் வென்றனர்.
   - இ. நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கத்தில் உள்ளவர்கள் சிரித்தனர்.
   - ஈ. நீரின்றி இவ்வுலக மக்களால் இயங்க முடியாது.

**சிந்தனை வினா**

1. தற்காலப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் ஆகுபெயரை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
2. பட்டப் பெயர்கள் ஆகுபெயர்கள் ஆகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.



9th_Tamil_Pages 122-264.indd 201 23-01-2020 20:21:15

# மதிப்பீடு

KGUH7T

**பலவுள் தெரிக.**

1.இந்திய தேசிய இராணுவத்தை ..............இன் தலைமையில் ................. உருவாக்கினர்.

அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர்

ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்

இ) மோகன்சிங், ஜப்பானியர்

ஈ) மோகன்சிங், இந்தியர்

2. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

அ) வருக்கை – இருக்கை ஆ) புள் – தாவரம்

இ) அள்ளல் – சேறு ஈ) மடிவு – தொடக்கம்

3. இளங்கமுகு, செய்கோலம் – இலக்கணக்குறிப்புத் தருக.

அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை

இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, உருவகத்தொடர்

4. நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு – இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,

அ) பாண்டிய நாடு, சேர நாடு ஆ) சோழ நாடு, சேர நாடு

இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

5. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?

அ. மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்

ஆ. வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்

இ. செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்

ஈ. பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

6. கூற்று – இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.

காரணம் – இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்.

அ) கூற்று சரி; காரணம் சரி

ஆ) கூற்று சரி; காரணம் தவறு

இ) கூற்று தவறு; காரணம் சரி

ஈ) கூற்று தவறு; காரணம் தவறு

## குறு வினா

1. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?
2. தாய்நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?
3. 'மதுரைக்காஞ்சி' – பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.
4. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.
5. கருக்கொண்ட பச்சைப் பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?
6. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ – இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?
7. "டெல்லி நோக்கிச் செல்லுங்கள்" என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?

## சிறுவினா

1. குறிப்பு வரைக – டோக்கியோ கேடட்ஸ்
2. பனியிலும், மலையிலும் எல்லையைக் காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் பள்ளிக் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.
3. "மாகால் எடுத்த முந்நீர்போல" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
4. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.
6. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?
7. பண்பாகுபெயர், தொழிலாகுபெயர் – விளக்குக.

## நெடுவினா

1. இந்தியதேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரைவழி நிறுவுக.
2. ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.
3. எங்கள் ஊர்ச் சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.



9th_Tamil_Pages 122-264.indd 203 23-01-2020 20:21:15

## மொழியை ஆள்வோம்

### படித்துச் சுவைக்க.

#### எல்லார்க்கும் பெய்யும் மழை

*ஏந்திக்கொள்கிறார்கள் சிலர்*
*வரமாக*
*ஏற்றுக்கொள்கிறார்கள் சிலர்*
*வேறு வழியின்றி*
*ஒதுங்கிக்கொள்கிறார்கள் சிலர்*
*ஒத்துக்கொள்ளாதெனப்*
*பாறையில் விழுந்து*
*பயன்படாமலே போகின்றன*
*சில துளிகள்*
*சாக்கடையில் விழுந்து*
*சங்கமமாகின்றன சில*
*ஆனாலும்*
*எப்போதும்போல*
*இன்னமும்*
*எல்லோருக்குமாகப்*
*பெய்துகொண்டுதான் இருக்கிறது*
*மழை!*

#### காலை

*ஒவ்வொரு முறையும்*
*காவிரி ஆற்றைக்*
*கடந்து செல்கையில்*
*நீந்திக் களித்த நாட்கள்*
*நினைவுக்கு வந்தன!*
*குளித்து மகிழ்ந்த ஆற்றை*
*குழந்தையிடம் காட்டிய போது*
*அவள் கேட்டாள். . .*
*"எப்படி அம்மா. . .*
*மணலில் நீந்திக்*
*குளித்தாய்?"*

### மொழிபெயர்க்க.

*Conversation between two friends meeting by chance at a mall.*

**Aruna:** *Hi Vanmathi! It's great to see you after a long time.*

**Vanmathi:** *It's great seeing you. How long has it been? It must be more than 6 months. I'm doing good. How about you?*

**Aruna:** *Fine. I have come with my parents. They are inside the grocery shop. What about you?*

**Vanmathi:** *I came with my father. He has gone to buy tickets for a 3D movie.*

**Aruna:** *Which movie?*

**Vanmathi:** *Welcome to the jungle.*

**Aruna:** *Great! I am going to ask my parents to take me to that movie.*



9th_Tamil_Pages 122-264.indd 204 23-01-2020 20:21:15

### பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு, சொற்றொடரை விரிவாக்குக.

1. புத்தகம் படிக்கலாம் ( நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உணர்ந்து)
2. விளையாடுவது நன்று (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)

(எ.கா.) நல்ல புத்தகம் படிக்கலாம், நாளும் நல்ல புத்தகம் படிக்கலாம்

### பிழை நீக்குக.

பெறுந்தலைவர் காமராசர் பள்ளிப் படிப்பை நிரைவு செய்யவிள்ளை எண்ராலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அலவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்கலை நாள்தோறும் படித்தது. எப்போது அரையை விட்டு வெளியே போனாலும் மின்விசிரியை நிருத்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடைய துணிமனிகளைத் தாமே எடுத்துவைத்துக்கொள்வார்.

### கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆகுபெயர்களை அட்டவணைப்படுத்துக.

விமலா கூடத்தில் உள்ள தட்டிலிருந்த டிசம்பரைத் தலையில் சூடிக்கொண்டாள். மல்லிகையைப் படத்திற்குச் சூட்டினாள். அடுப்பிலிருந்து பாலை இறக்கினாள். பின்பு தோட்டத்திற்குச் சென்றாள். விமலாவைப் பார்த்தவுடன் தோட்டம் அமைதியானது! "தலைக்கு இருநூறு கொடுங்கம்மா" என்று தோட்டத்தில் வேலை செய்தவருள் ஒருவர் சொன்னார். வெள்ளை மனங்கொண்ட வேலையாட்களின் கூலியைக் குறைக்க விரும்பாமல் அதனை அவளும் ஏற்றுக்கொண்டாள். அவர்கள் சென்றதும், காலையில் சாப்பிடப் பொங்கல் வைத்தாள். வீட்டில் சமையல் செய்ய, எந்தெந்தப் பொருள்கள் குறைவாக உள்ளன என்பதைப்பற்றிச் சிந்தித்தாள். "சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும். தாளிப்பதற்கு மூன்று லிட்டர் வாங்க வேண்டும். துணி உலர்த்துவதற்கு நான்கு மீட்டர் வாங்க வேண்டும்" எனத் திட்டமிட்டாள். அலைபேசி அழைத்தது. அரை நிமிடம் அலைபேசியில் வந்த வயலின் கேட்டு மகிழ்ந்தாள். பிறகு எடுத்துப் பேசினாள். கடைக்குப் போய்விட்டு வந்த பிறகு, பாதியில் விட்டிருந்த சிவசங்கரியைப் படித்து முடிக்கவேண்டும் என்று நினைத்தாள்.

### பயண அனுபவங்களை விவரிக்க.

"எனது பயணம்" என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

### நயம் பாராட்டுக.

*வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்*
*வளைந்துசெல் கால்களால் ஆறே!*
*அயலுள ஓடைத் தாமரை கொட்டி*
*ஆம்பலின் இதழ்களை விரித்தாய்*
*கயலிடைச் செங்கண் கருவரால் வாளை*
*கரைவளர் தென்னையில் பாயப்*
*பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்*
*பெருங்குளம் நிறைந்து விட்டாயே!* – வாணிதாசன்



9th_Tamil_Pages 122-264.indd 205 23-01-2020 20:21:16

## மொழியோடு விளையாடு

**புதிர் அவிழ்க்க.**


*நான்கெழுத்துக்காரன்;*
*முதல் இரண்டும்*
*அம்மாவில்*
*"மா"வைத் தொலைத்து நிற்கும்;*
*அடுத்த எழுத்தைச் சேர்த்தால்*
*வில்லின் துணைவன்;*
*கடை இரண்டும்*
*கணக்கில் 'இது' என்பர்.!*
*முழுதாய்ப் பார்த்தால்*
*மேகத்திடை தெரிவான்!*
*அவன் யார்?*

**பண்புத்தொகைகளை இட்டு நிறைவு செய்க.**

(இன்னோசை , பேரொளி , சிற்றோடை , பேரின்பம் , பைங்கிளி , பேரூர், செந்தாமரை )

மானாமதுரை ஓர் அழகான _________; நீண்டவயல்களும்_________களும் நிறைந்த அவ்வூரின் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய கோவில் குளத்தில் எங்கும் ________ பூக்கள் மலர்ந்துள்ளன; கதிரவனின் ______________ வீசிட, சோலைப்__________களின் _____________கேட்போரைப் ______________ அடையச் செய்கிறது.

**வட்டத்திற்குள் உள்ள எழுத்துகளைக்கொண்டு சொற்களை உருவாக்குக.**




**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



................................................................................................................

................................................................................................................

................................................................................................................

................................................................................................................

................................................................................................................

## செயல்திட்டம்

ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப்பொருள்களின் பட்டியலை உருவாக்குக.

**அகராதியில் காண்க**

ஈகை, குறும்பு, கோன், புகல், மொய்ம்பு



9th_Tamil_Pages 122-264.indd 206 23-01-2020 20:21:16

## நிற்க அதற்குத்தக

### சமூகத்திற்கு எனது பணிகள்

அ) குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடுவேன்.

ஆ) தண்ணீர் வீணாவதை எங்குக் கண்டாலும் தடுப்பேன்.

இ) மழைநீர்ச் சேகரிப்பின் இன்றியமையாமையை வலியுறுத்துவேன்.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

### கலைச்சொல் அறிவோம்

இந்திய தேசிய இராணுவம் – Indian National Army
செவ்வியல் இலக்கியம் – Classical Literature
பண்டமாற்றுமுறை – Commodity Exchange,
கரும்புச் சாறு – Sugarcane Juice,
காய்கறி வடிசாறு – Vegetable Soup

## அறிவை விரிவுசெய்

- ஆகாயத்துக்கு அடுத்த வீடு – மு. மேத்தா
- தமிழ்ப் பழமொழிகள் – கி.வா. ஜகந்நாதன்
- இருட்டு எனக்குப் பிடிக்கும் (அன்றாட வாழ்வில் அறிவியல்) – ச. தமிழ்ச்செல்வன்

## இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/courses/degree/c021/c0211/html/c0211221.htm
http://www.tamilsurangam.in/literatures/patthu_paddu/maduraikanchi_1.html#.Wqoay-huZPY
https://tamil.mapsofindia.com/tamil-nadu/madurai/madurai-district-map.html


## இணையச் செயல்பாடுகள்




**ஆகுபெயரை அடையாளம் காண்போமே!**

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி ஆகுபெயர் என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன் ஆகுபெயர் பற்றிய விளக்கமும் அதன் வகைகளும் எடுத்துக்காட்டுடன் கொடுக்கப்பட்டிருக்கும்.
- அதனைத் தெளிவுற அறிந்த பின்பு திரையின் கீழ் வரும் தேர்வு என்பதைத் தேர்ந்தெடுத்து, கொடுக்கப்படும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.



செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=appinventor.ai_ngmukun.aagupeyar



9th_Tamil_Pages 122-264.indd 207 23-01-2020 20:21:17

# சாலைப் பாதுகாப்பு

## உயிர்ப் பாதுகாப்பின் முதல் படி

அறிவை விரிவுசெய்யவும் அகண்டமாக்கவும் அகன்ற பார்வையுடன் மக்களைச் சந்திக்கவும் அவர்களோடு பயணம் செய்யவும் நமக்கு உதவுவன சாலைகளே! வாழ்க்கையில் இலக்கு இன்றியமையாதது; சாலையில் பாதுகாப்பு இன்றியமையாதது. நிலத்தின் உயிரோட்டமாகத் திகழும் ஆறுகளுக்கு அடுத்தபடியாக அவ்வாறு திகழ்வன சாலைகளே! நேராகவும் குறுக்காகவும் வளைந்தும் நெளிந்தும் செல்லும் சாலைகள் நாட்டின் நரம்புகள்.

இந்தியாவில் பயணிக்கும் சாலைவகைகளை நாம் அறிந்துகொள்வோம்.

1. **தேசிய நெடுஞ்சாலைகள் (National Highways):** நாட்டின் முக்கிய நகரங்கள், துறைமுகங்கள், சுற்றுலாத் தலங்கள் போன்றவற்றை இணைப்பவை.
2. **மாநில நெடுஞ்சாலைகள் (State Main Roads):** இவை தேசிய நெடுஞ்சாலைகளை மாநிலங்களோடு இணைக்கின்றன. மாநில நெடுஞ்சாலைகள் மாவட்டங்களின் தலைநகரங்கள், சுற்றுலாத் தலங்கள், மாவட்டங்களில் உள்ள சிறு நகரங்கள் ஆகியவற்றை இணைக்கின்றன.
3. **சிற்றூர்ச் சாலைகள் (Village Roads):** இந்தியாவின் நாடித்துடிப்பாக விளங்குபவை சிற்றூர்களே(கிராமங்களே). அந்தச் சிற்றூர்களையும் மற்ற ஊர்களையும் இணைப்பவை சிற்றூர்ச் சாலைகள். அவை மாவட்டங்களையும் மாநிலங்களையும் தாண்டித் தேசிய நீரோட்டத்தில் கலக்கிறன்றன.

## வேகக் கட்டுப்பாடு

போகுமிடம்தான் முக்கியமே தவிர, போகும் வேகம் அல்ல. ஐந்து மணித் துளிகள் முன்னரே கிளம்பினால், நேர அழுத்தத்திலிருந்தும் சாலை நெரிசலிலிருந்தும் மீளலாம். சரியான நேரத்துக்குச் செல்வது முக்கியம்தான். அதைவிட முக்கியம் விபத்தில்லாப் பயணம் அல்லவா? அரக்கப்பரக்க ஊர்திகளை ஓட்டக்கூடாது என்பதற்காகத் தமிழக அரசு வேகக் கட்டுப்பாடு விதித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் இருசக்கர ஊர்திகள் 50கி.மீ வேகத்திலும், நான்கு சக்கர ஊர்திகள் 60 கி.மீ. வேகத்திலும் செல்லலாம் என்பது பொது விதி. எனினும் பள்ளிகள், மருத்துவமனைகள், பெருஞ்சாலைகள், மக்கள் கூடும் இடங்கள் போன்ற ஊர்ப்பகுதிகள், மலைப் பாதைகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள் ஆகியவற்றில் வேகக்கட்டுப்பாட்டில் செல்லவேண்டிய இடங்களையும் வேக அளவையும் காட்டும் குறியீடுகள் இருக்கும். அவற்றைப் பார்க்கக்கூடிய அளவு வேகத்தில் பயணம் செய்வதும் அவற்றைப் பின்பற்றுவதுமே சிறப்பு.

## சாலையில் செல்லுமுன் இவற்றை நினைவில் கொள்ளுங்கள்

- அலைபேசியை அணைத்துவிட்டுச் சாலையைக் கடப்பதே நல்லது.
- அலைபேசியில் பாட்டுக் கேட்டபடி, பேசியபடி ஊர்தியை ஓட்டாதீர்கள்.
- விளையாட்டுத் திடல்களில் மட்டுமே விளையாடுங்கள், சாலைகளில் அல்ல.
- சாலைகளின் இருபுறங்களிலும் உள்ள நடைமேடைகளைப் பயன்படுத்துங்கள்.
- விதிக்கப்பட்ட இடங்களில் மட்டும் சாலையைக் கடக்கவும்.
- ஆர்வக் கோளாறில் ஓட்டுநர் உரிமம் இன்றி வண்டிகளை ஓட்டுவது சட்டப்படி குற்றம்.
- பின்புறப் பயணிகளும் தலைக்கவசம் அணிவது கட்டாயம்.

சாலை விதிகளை மதிப்பது உயிர்ப் பாதுகாப்பின் முதல் படி.
தறிகெட்ட வேகம் நூற்று எட்டில் முடியும்.



9th_Tamil_Pages 122-264.indd 208 23-01-2020 20:21:17